Find us on facebook/tamilmirror    Follow us on tamilmirror    epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, JUNE 27 2025

வெள்ளிக்கிழமை 27, ஜூன் 2025 | ஒளி: 10 கதிர் 271 | பக்கம்:07 | நகரப்பதிப்பு★ | FREE




## Oxford அகராதியில் கொத்து, வட்டலப்பம்

ஒக்ஸ்போர்ட் (Oxford) ஆங்கில அகராதியில் (OED) ஜூன் 2025 புதுப்பிப்பில் பல உள்ளூர் பிரபலமான சொற்கள் அதிகாரப்பூர்வமாக சேர்க்கப்பட்டுள்ளதால், இலங்கையின் வளமான சமையல் மற்றும் கலாசார பாரம்பரியம் உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.

புதிய உள்ளீடுகளில் 'asweddumize' என்ற வார்த்தையும் உள்ளது, இது இலங்கையின் விவசாய மற்றும் நில சீர்திருத்த வரலாற்றுடன் நீண்டகாலமாக தொடர்புடைய ஒரு சொல் ஆகும்.

தொடர்ச்சி P2

## விதைக்கப்பட்டுள்ளார்கள்

# செம்மணியில் புதைக்கவில்லை



■ எஸ்.ஆர்.லெம்பேட்

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக கடந்த 16 வருடங்களுக்கு மேலாக நாங்கள் வீதியில் நின்று போராடி வருகிறோம். தமது உறவுகளுக்காகப் போராடிய எத்தனையோ தாய்மார்கள் மரணித்து விட்டனர். எனினும், போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்தால் மட்டுமே எங்களுக்கான நீதியைப் பெற்றுக் கொள்ள முடியும் என வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடும் சங்கத்தின் இணைப்பாளர் மனுவில் உதயச்சந்திரா தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் ஏற்பாடு செய்த 'நீதிக்கான நீண்ட காத்திருப்பு' எனும் கருப்பொருளில் 'காணாமல் ஆக்கப்பட்டோரின் கண்ணீர்க்கதை' ஆவணப்படம் திரையிடலும்,கருத்துப் பகிர்வும் வியாழக்கிழமை (26) காலை 10 மணியளவில் மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன் போது கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## இராணுவ தலைமை பணியாளர் நியமனம்



இராணுவத்தின் 67ஆவது தலைமைப் பணியாளராக இலங்கை பொறியியலாளர் படையணியைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் கபில டோலேஜ் நியமிக்கப்பட்டுள்ளார்.

26ஆம் திகதி முதல் அமுக்கும் வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் 66ஆவது தலைமைத் தளபதியாகப் பணியாற்றிய மேஜர் ஜெனரல் சந்தன விக்ரமசிங்கேவுக்குப் பதிலாக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

### தரமற்ற மருந்துகள் விவகாரம்

## கெஹலியவுக்கு எதிராக 350 சாட்சிகள்

நரம்பியல் நோய்களுக்குப் பயன்படுத்தப்படும் 'இம்யூனோகுளோபின்' மற்றும் புற்றுநோய் நோயாளிகளுக்குப் பயன்படுத்தப்படும் 'ரிட்டோக்ஸிமேப்' எனப்படும் தரமற்ற தடுப்பூசிகளை வாங்கி, இந்திய கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களைப் பயன்படுத்தி போலி ஆவணங்களைப் பயன்படுத்தி அரசு மருத்துவமனைகளுக்கு விநியோகிக்கப்பட்டதன் மூலம் ரூ.14.5 மில்லியன் மோசடி செய்ததாக முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மற்றும் 12 பேருக்கு எதிராக சட்டமா அதிபர் கொழும்பு நிரந்தர மேல் நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு முன், வியாழக்கிழமை (26) வழக்குத் தொடர்ந்தார்.

13 குற்றச்சாட்டுகளின் கீழ் 12 பிரதிவாதிகள் மீது தனித்தனி வழக்குகளைத் தாக்கல் செய்துள்ள சட்டமா அதிபர், பிரதிவாதிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபிக்க கிட்டத்தட்ட 350 சாட்சிகளையும் சுமார் 300 வழக்குப் பொருட்களையும் முன்வைப்பதாக அறிவித்துள்ளார்.



தொடர்ச்சி P2

## உ/த பரீட்சை திகதிகள் அறிவிப்பு

2025ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தர (உ/த) பரீட்சை நவம்பர் 10 முதல் டிசெம்பர் 05, வரை நடைபெறும் என்று பரீட்சைகள் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது.

அதன்படி, 2025ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தர பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஜூன் 26 முதல் ஜூலை 21, வரை ஒன்லைனில் ஏற்றுக்கொள்ளப்படும்.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் மற்றுமொரு மோசடி அம்பலம்

ஜனாதிபதி மன்னிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விடுதலை குறித்து அண்மையில் பல சர்ச்சைகள் எழுந்திருந்தன. அந்த வகையில், தற்போது மற்றுமொரு பிரச்சினையும் வெளிவந்துள்ளது.

இதில், முன்னாள் அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோவின் மனைவி மேரி ஜூலியட் மோனிகா பெர்னாண்டோவின் விடுதலையும், ஜனாதிபதி மன்னிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

பதவி நீக்கம் செய்யப்பட்ட சிறைச்சாலைகள் ஆணையாளர் துசார உப்புல்தெனியவின் வழக்கு, கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

முன்னதாக, 2 பெண்களைக் கடத்தி கொலை செய்ததற்காக அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

எனினும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து ஜனாதிபதி மன்னிப்பைப் பெற்ற பின்னர், 2009ஆம் ஆண்டு மார்ச் மாதம் மேரி ஜூலியட் மோனிகா பெர்னாண்டோ விடுவிக்கப்பட்டார்.

இது சர்வதேச மகளிர் தினத்துடன் தொடர்புடைய மன்னிப்பாக அறிவிக்கப்பட்டதாகச் சட்டமா அதிபர் திணைக்களம் மன்றில் சுட்டிக்காட்டியுள்ளது.

## "உரிமையை உறுதி செய்ய நிபந்தனையற்ற ஆதரவு"

தேசிய பாதுகாப்பிற்கு முக்கியமான விடயமாக அமைந்து காணப்படும் வாழும் உரிமையை உறுதி செய்யும் விடயத்தில் தற்போதைய அரசாங்கம் தோல்வி கண்டுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

மித்தெனிய பகுதியில் இரு இளைஞர்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் மற்றும் அனுராதபுரம் பகுதியில் நடந்த துப்பாக்கிச் சூடு போன்ற சம்பவங்களுடன் இவ்வருடம் இந்த கொலை கலாச்சாரம் அதிகரித்துக் காணப்படுகின்றன. உயிரிழப்புகள், கொலைகள் மற்றும் வன்முறைகளும் அதிகரித்து வருகின்றன.

திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் கும்பல்களும், அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகளும் சமூகத்தைப் பயமுறுத்தி வருகின்றனர். சட்டத்தின் ஆட்சி இன்று சமூகத்தில் இல்லாத நிலையே காணப்படுகின்றன என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2





## ஜனக ஸ்ரீ சந்திரகுப்தவுக்கு விளக்கமறியல்

சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்தவை ஜூலை மாதம் 08ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க, கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் வியாழக்கிழமை (26) உத்தரவிட்டுள்ளது.

ஜனக ஸ்ரீ சந்திரகுப்த வாக்குமூலம் வழங்குவதற்காக இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவில் வியாழக்கிழமை (26) காலை முன்னிலையாகிய போது குறித்த ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கெஹெலிய குடும்பத்துக்கே கேஸ்



முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் ஐந்து பேருக்கு எதிராக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, வியாழக்கிழமை(26) குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது.

பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

கெஹலிய ரம்புக்வெல்ல, அவரது மனைவி, மூன்று மகள்கள் மற்றும் ஒரு மருமகன் மீது இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு 43 குற்றச்சாட்டுகளை முன்வைத்துக் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்துள்ளது.

தொடர்ச்சி P2



## கொழும்பு தொடக்க கூட்டமே தொங்கியது

கொழும்பு மாநகர சபையின் முதல் பொதுக் கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் சட்டப்பூர்வமானது அல்ல என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதை அடுத்து, கொழும்பு மேயர் வ்ராய் கெலீ பல்தசார் கூட்டத்தை 10 நிமிடங்கள் ஒத்திவைத்தார்.

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின்படி, பொதுக் கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரலை உறுப்பினர்களுக்கு 4 நாட்களுக்கு முன்பே அனுப்ப வேண்டும் என்றாலும், கூட்டம் தொடங்குவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு உறுப்பினர்களால் இந்தப் பொதுக் கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் பெறப்பட்டது, மேலும் ஜன பலவேகய உறுப்பினர் ராய் போகவேட்டே ஆட்சேபனை தெரிவித்தார்.

இது ஒரு தவறா என்று போகவேட்டே மேயர் மற்றும் கொழும்பு மாநகர சபை ஆணையர் பாலித நாணயக்காரவிடம் திறந்த கூட்டத்தில் கேள்வி எழுப்பினார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# செம்மணியில் புதைக்கவில்லை

அவர் மேலும் தெரிவிக்கையில், இசைப்பிரியன் தயாரிப்பில் வெளியிடப்பட்ட நீதிக்கான நீண்ட நாள் காத்திருப்பு காணாமல் போனோரின் கண்ணீர்க்கதை ஆவணப்படம் மன்னாரில் வெளியிடப்பட்டது.

வடக்கு கிழக்கில் உள்ள 8 மாவட்டத்திலும் குறித்த ஆவணப்படம் வெளியிடப்பட்டது. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி மறுக்கப்பட்டு வருகிறது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் நிலை வெளிக்கொண்டு வரும் வகையில் இந்த ஆவணப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது. காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காகத் தாய்மார் பட்ட கஷ்ட துன்பங்களை ஏனையோரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக வெளியிட்டு வருகிறோம்.

அந்த வகையில், மன்னாரிலும் இந்த ஆவணப்படம் திரையிடப்பட்டது. இந்த ஆவணப் படத்தைத் தயாரித்த இசைப்பிரியன் இன்று எங்களுடன் இல்லை.

ஆனால், அவர் எங்களுடன் இணைந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காகப் போராடி குரல் கொடுத்தவர். அவர் மரணித்தாலும் அவர் எங்களுக்காக குரல் கொடுத்தவர். அவரது ஆத்மா சாந்தியடைய வேண்டும்.

கடந்த 16 வருடங்களுக்கு மேலாகக் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக நாங்கள் வீதியில் நின்று போராடி வருகிறோம். தமது உறவுகளுக்காகப் போராடிய எத்தனையோ தாய்மார்கள் மரணித்து விட்டனர். எத்தனையோ பேர் வலு இழந்து விட்டனர்.

எத்தனையோ வருடங்களாகப் போராடி விட்டோம். எமக்கு நீதி கிடைக்கவில்லை. இதற்கு பின்னரும் இந்த அரசாங்கம் காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளுக்கு நீதியைப் பெற்றுத் தருமா? என்கின்ற கேள்வி எழுந்துள்ளது. அம்மாக்களும் போராடிச் சோர்வடைந்து விட்டனர்.

எவ்வாறாக இருந்தாலும் நாங்கள் போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்தால் மட்டுமே எங்களுக்கான நீதியைப் பெற்றுக் கொள்ள முடியும். காலம் தாமதிக்கும் நீதி மறுக்கப்படுகின்ற நீதி என கூறுகின்றனர். ஆனால், அவ்வாறு இருக்காது.

வடக்கு கிழக்கில் எத்தனையோ மனித புதைகுழிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. செம்மணி புதை குழியில் நான்கு வயது முதல் 15 வயதுக்குட்பட்டவர்களின் எலும்புக்கூடுகளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

ஒரு பிள்ளையை இராணுவம் பிடித்துச் செல்லும் போது தாய் ஒருவர் மேலும் ஒருவரைத் துணைக்கு அழைத்துச் சென்றிருப்பார்.இந்த தாய் இவ்வாறு நிலை ஏற்படும். தன்னை மண்ணுக்குள் புதைப்பார்கள் என்று நினைத்து அங்கே சென்றிருக்க மாட்டார்.

இவ்வாறு சென்றவர்களையே இராணுவம் கொலை செய்து மண்ணுக்குள் புதைத்துள்ளனர். அவர்கள் அனைவரும் புதைக்கப்படவில்லை. விதைக்கப்பட்டுள்ளனர். தமிழர்கள் ஒவ்வொருவரும் அதற்காக குரல் கொடுக்க வேண்டும். நீதியையும், நியாயத்தையும் தட்டிக் கேளுங்கள். என அவர் மேலும் தெரிவித்தார்.

இதன்போது, உயிரிழந்த இசைப்பிரியனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதோடு, ஆவணப்படமும் திரையிடப்பட்டது. குறித்த நிகழ்வில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், பொது அமைப்பு, சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# Oxford அகராதியில் கொத்து, வட்டலப்பம்

'asaddumize' தவிர, பல அன்பான இலங்கை உணவுகள் மற்றும் கலாச்சார வெளிப்பாடுகள் மதிப்புமிக்க அகராதியில் ஒரு இடத்தைப் பெற்றுள்ளன.

இவற்றில் நறுக்கப்பட்ட தட்டையான ரொட்டியால் செய்யப்பட்ட பிரபலமான தெரு உணவான 'கொத்து ரொட்டி' மற்றும் பாரம்பரிய மசாலா தேங்காய் கஸ்டர்ட் இனிப்பு 'வட்டலப்பம்' ஆகியவை அடங்கும்.

அகராதியில் சேர்க்கப்பட்ட பிற சொற்கள் 'மெல்லம்' (ஒரு இலை காய்கறி உணவு), 'கிரிபத்' (பால் சாதம்), 'அவுருடு' (சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு), 'பைலா' (ஒரு துடிப்பான இசை வகை), மற்றும் 'பப்பரே' (பொதுக் கூட்டங்கள் மற்றும் விளையாட்டு நிகழ்வுகளில் பிரபலமான பித்தளை இசைக்குழு இசை).

சமீபத்திய புதுப்பிப்பு இலங்கையின் தனித்துவமான மொழி, உணவு வகைகள் மற்றும் கலாசார நடைமுறைகள் குறித்த வளர்ந்து வரும் உலகளாவிய விழிப்புணர்வையும் பாராட்டையும் பிரதிபலிக்கிறது

# இராணுவ தலைமை பணியாளர் நியமனம்

காலாட்படை படைப்பிரிவின் கேர்ணல் மேஜர் ஜெனரல் மனாடா யஹம்பத், இராணுவத்தின் 47ஆவது பிரதி தலைமைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.
இவரது நியமனமும் 26 ஆம் திகதி முதல் அமுக்கும் வரும் வகையில் வழங்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி மாதம் முதல் இராணுவத்தின் 46வது பிரதி தலைமைத் தளபதியாகப் பணியாற்றிய மேஜர் ஜெனரல் லங்கா அமரபாலவிற்கு பதிலாக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

# உ/த பரீட்சை திகதிகள் அறிவிப்பு

அரசப் பாடசாலைகள் மற்றும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகள் மாணவர்கள் தங்கள் விண்ணப்பங்களை அந்தந்த பாடசாலை அதிபர்கள் மூலமாகவும், தனியார் விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை தாங்களாகவே சமர்ப்பிக்க வேண்டும் என்றும் மேலும் கூறப்பட்டுள்ளது.

பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது தனியார் விண்ணப்பதாரர்கள் தங்கள் தேசிய அடையாள அட்டை (NIC) எண்ணைப் பயன்படுத்த வேண்டும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் அதிகாரப்பூர்வ வலைத்தளமான wwdoenets.lk அல்லது wwonlineexams.gov.lk/eic ஐப் பார்வையிட்டு, தொடர்புடைய வழிமுறைகளை கவனமாகப் படித்து அதற்கேற்ப தங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

விண்ணப்பத்தை சமர்ப்பித்த பிறகு, அவசர காலங்களில் வேட்பாளர்கள் அச்சிடப்பட்ட நகலை தங்களிடம் வைத்திருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பாடசாலை விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க தேவையான பயனர்பெயர் மற்றும் கடவுச்சொல் ஏற்கெனவே அந்தந்த பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

2025 ஜூலை 21, அன்று நள்ளிரவு 12.00 மணிக்குப் பிறகு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.

எந்த சூழ்நிலையிலும் இறுதித் திகதி நீட்டிக்கப்படாது என்றும் அறிக்கையில் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், விசாரணைகளுக்கு, விண்ணப்பதாரர்கள் பின்வரும் தொலைபேசி எண்கள் அல்லது மின்னஞ்சல் மூலம் தேர்வுத் துறையைத் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

தொலைபேசி: 011-2784208, 011-2784537, 011-2785922 / ஹாட்லைன்: 1911 / மின்னஞ்சல்: gcealexam@gmail.com

# "உரிமையை உறுதி செய்ய நிபந்தனையற்ற ஆதரவு"

காணப்படுகின்றன என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஒரு ஜனநாயக நாட்டில் இருக்க வேண்டிய வலுவான பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கை தற்போதைய அரசாங்கம் செயல்படுத்தத் தவறிவிட்டது. இவ்வாறு நாட்டில் இருக்கும் இளைஞர்களை நாம் இழக்கும்போது, கொலையாளிகள் மற்றும் அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகளால் மனித உயிர்கள் இழக்கப்படும்போது, தற்போதைய அரசாங்கம் தேசிய பாதுகாப்புக்கு முக்கிய அம்சமாக அமைந்து காணப்படும் வாழும் உரிமையை உறுதி செய்யத் தவறிவிட்டது.

கொலைக் கலாச்சாரம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அரசாங்கம் பல்வேறு புள்ளிவிவரங்களைக் காட்டினாலும், இந்த மனித உயிர்களை வெறும் புள்ளிவிவரங்களுடன் சுருக்கிக் கொள்ள முடியாது. இந்த மனித உயிர்களின் மதிப்பை பணத்தை வைத்தும் அளவிட முடியாது. கொலைகாரர்களின் அச்சுறுத்தல்களால் முழு சமூகமும் மூழ்கடிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையில், அரசாங்கத்திடமிருந்து இதற்கான தீர்வுகளும் பதில்களும் தேவை. சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதும், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதும் அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

ஐஸ் போதைப்பொருள் சமூகத்தில் பரவலாக வியாபித்து காணப்படுகின்றது. இளைஞர்கள் மட்டுமல்லாது, பாடசாலை மட்டத்திலும் கூட இந்த போதைப்பொருள் பரவி காணப்படுகின்றன. இதன் காரணமாக, நாடு இளம் தலைமுறையினரை இழந்து வருகிறது. எனவே, நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறோம். இவை தேசிய பாதுகாப்புக்கு கடுமையான சவாலாக அமைந்து காணப்படுகின்றன. இந்தப் பிரச்சினைகளுக்கு அரசாங்கத்திடம் பதில்கள் இல்லாமல் இருப்பது வருந்தத்தக்கது என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பொருட்களின் விலை அதிகரிப்பு, அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு காணப்படும் தட்டுப்பாடு, மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் நலன்புரி சார் விடயங்களில் நடக்கும் வெட்டுக்கள் போலவே மறுபுறம் கொலை கலாச்சாரத்தால் உயிர் இழப்புகளும் நடந்து வருகின்றன. இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாக காணப்படுகின்றன. பாராளுமன்றத்தில் இது குறித்து கேள்வி எழுப்பும் சந்தர்ப்பங்களில், புள்ளிவிவரங்களை முன்வைத்து, இவை சாதாரண கொலைகள் என்று அரசாங்கம் பிரஸ்தாபித்து வருகிறது.

# கெஹலியவுக்கு எதிராக 350 சாட்சிகள்

கொழும்பு நிரந்தர உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகளான மஹேஹன் வீரமன், அமலி ரணவீர மற்றும் பிரதீப் அபேரத்ன ஆகிய மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு முன் சட்டமா அதிபர் இந்த வழக்கைத் தாக்கல் செய்தார்.

பெரும் சமூக அமைதியின்மையை ஏற்படுத்திய மற்றும் இலங்கைக்கு பெரும் பொருளாதார இழப்பை ஏற்படுத்திய இந்த வழக்கை, சட்டமா அதிபர் பாரிந்த ரணசிங்க, தலைமை நீதிபதி மிருது பெர்னாண்டோவுக்கு எழுதிய கடிதத்தில்,

இந்த வழக்கைத் தாமதமின்றி விசாரித்துத் தீர்ப்பை வழங்க கொழும்பு மேல் நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு நியமிக்கப்பட வேண்டும் என்று கோரினார். இந்தியக் கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன் பணத்தில் தயாரிக்கப்பட்ட போலி ஆவணங்களைப் பயன்படுத்தி அரசு மருத்துவமனைகளுக்கு விநியோகிக்கப்பட்ட நரம்பியல் நோய்களுக்குப் பயன்படுத்தப்படும் 'இம்யூனோகுளோபின்' மற்றும் புற்றுநோய் நோயாளிகளுக்குப் பயன்படுத்தப்படும் 'ரிட்டோக்ஸிமேப்' ஆகியவற்றிற்குப் பதிலாக, மருந்து அல்லாத திரவங்களின் 6,195 குப்பிகள் சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவுக்கு ரூ.100,000 செலவில் வழங்கப்பட்டன. ரூ.1,444 மில்லியன் தொகையை அரசாங்க நிதியை மோசடியாகக் கையாண்டதாகவும், தொடர்புடைய நிதியை குற்றவியல் ரீதியாகப் பயன்படுத்தியதாகவும் சட்டமா அதிபர், பிரதிவாதிகள் மீது குற்றம் சாட்டியுள்ளார்.

# கெஹெலிய குடும்பத்துக்கே கேஸ்

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, அவர்களின் சொத்துக்கள் தொடர்பான விசாரணைகள் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

## எம்.பி. தகுதி வழக்கில்
# சட்டமா அதிபரின் நிலைப்பாடு அர்ச்சுனாவுக்கு சாதகமாக இல்லை

யாழ்.மாவட்ட சுயேச்சைக்குழு பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா ராமநாதன் பாராளுமன்ற உறுப்பினராக தொடர்ந்து பதவி வகிப்பதற்கான தகுதியை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட குவோ வாரண்டோ ரிட் மனு மீதான விசாரணையை மேல்முறையீட்டு நீதிமன்றம் வியாழக்கிழமை (26) தொடங்கியது.

அபிநவ நிவஹல் பெரமுனவின் தலைவர் ஓஷல ஹேரத் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா ராமநாதன் அரசாங்க மருத்துவ அதிகாரியாக பணியாற்றும் போது சமீபத்திய பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுவை சமர்ப்பித்ததாகக் கூறுகிறார். அரசுப் பணியில் இருந்து முதலில் இராஜினாமா செய்யாமல் வேட்புமனுக்களை சமர்ப்பிப்பது பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் விதிகளை மீறுவதாக ஹேரத் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வழக்கு நீதியரசர்களான மாயாதுன்னே கொரியா மற்றும் மஹேன் கோபல்லவா ஆகியோர் முன்னிலையில் விசாரிக்கப்பட்டது.

மனுதாரர் சார்பாக ஆஜரான வழக்கறிஞர் என்.கே. அசோக்பரன், பாராளுமன்ற உறுப்பினர் ராமநாதன் ஒரு பொது அதிகாரியாக இருப்பதால், அவர் பாராளுமன்ற உறுப்பினர் ராமநாதன் அரசியலமைப்பு ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட தகுதியற்றவர். அவர் ஒரு பொது அதிகாரியாக இருப்பதால், பாராளுமன்றத்தில் அமர அல்லது வாக்களிக்க தகுதியற்றவர். அரசியலமைப்பின் 66(இ) பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற உறுப்பினரின் இருக்கை காலியாகிவிட்டதாக வாதிட்டார். நீதிமன்றம் தனது இறுதித் தீர்ப்பை வழங்கும் வரை பாராளுமன்ற உறுப்பினர் செயல்படுவதைத் தடுக்க இடைக்கால நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் அவர் கோரினார்.

அரசு தரப்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சுமதி தர்மவர்தன , எம்.பி. ராமநாதன் இன்னும் ஒரு பொது அதிகாரியாகக் கருதப்படுகிறார் என்பதை உறுதிப்படுத்தினார்.

அரசியலமைப்பின் பிரகாரம், பொது அதிகாரிகள் மீதான ஒழுங்கு அதிகாரம் பொது சேவை ஆணையத்திடம் உள்ளது என்பதை எடுத்துக்காட்டினார். ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு மீது மேற்பார்வை செய்யும் அதிகாரம் பொது சேவை ஆணையம் உள்ளது. இது ஒரு தெளிவான மோதலுக்கு வழிவகுக்கிறது. ஏனெனில், இடைநீக்கத்திற்கு உள்ளான எம். பி.ராமநாதன் இப்போது தனது சொந்த ஒழுங்கு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அமைப்பின் மேற்பார்வையில் உள்ளார்.

## ஹட்டன்–டிக்கோயா நகர சபை:
# கைப்பற்றினார் அனுர: தோல்கொடுத்தார் ஜீவன்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன்-டிக்கோயா நகர சபையின் தவிசாளர் பதவி ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு பெற்றுக்கொண்டது. பிரதி தவிசாளர் பதவி, பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்குச் செல்கிறது.

ஹட்டன்- டிக்கோயா நகர சபையின் ஆரம்பக் கூட்டம், வியாழக்கிழமை (26) பிற்பகல் 3 மணிக்கு உள்ளூராட்சி ஆணையர் ஏ.எம்.கே.பி.கே. சமிலா அத்தப்பத்து தலைமையில் ஹட்டன்- டிக்கோயா நகர சபை கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

தவிசாளர், பிரதி தவிசாளர் பதவிக்காகத் திறந்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. தேசிய மக்கள் சக்தியின் கீழ் சபைக்குத் தவிசாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட சுரேந்திர ஆராச்சிகே அசோக கருணாரத்ன, 08 வாக்குகளையும் அதே நேரத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்த பெருமாள் சுரேந்திரன் 08 வாக்குகளைப் பெற்று மேற்படி சபையின் பிரதி தவிசாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடாக தவிசாளர் பதவிக்குப் போட்டியிட்ட அழகமுத்து நந்தகுமார் 07 வாக்குகளையும், அதே கட்சியைச் சேர்ந்த பிரதி தவிசாளர் பதவிக்குப் போட்டியிட்ட செல்லையா யோகேஸ்வரம் 07 வாக்குகளையும் பெற்றனர்.



# கொழும்பு தொடக்க கூட்டமே தொங்கியது

அதன்படி, மேயரும் நகராட்சி ஆணையரும் இது ஒரு தவறு என்றும் எதிர்காலத்தில் இதுபோன்ற தவறு நடக்காமல் பார்த்துக் கொள்வதாகவும் திறந்த கூட்டத்தில் கூறினர்.

பின்னர், எழுந்து நின்ற சமத ஜன பலவேகய உறுப்பினர் மகேந்திர சில்வா, அத்தகைய சட்டவிரோத நிகழ்ச்சி நிரலின் படி நிலைக்குழுக்கள் நியமிக்கப்பட்டால், அந்தக் குழுக்கள் சட்டவிரோதமானவை என்று கூறினார்.

அதன்படி, மகேந்திர சில்வா மேலும் கூட்டத்தை ஒத்திவைத்து வேறு ஒரு நாளில் கூட்டுமாறு முன்மொழிந்தார்.

அதன்படி, எழுந்து நின்ற துணை மேயர் ஹேமந்த குமார, கூட்டத்தை பத்து அல்லது பதினைந்து நிமிடங்கள் ஒத்திவைக்கலாம் என்று கூறிவிட்டு மீண்டும் தொடங்கினார்.

அந்த முன்மொழிவின்படி, மேயர் வ்ராய் கெலீ பல்தசார், கூட்டம் பத்து நிமிடங்கள் ஒத்திவைக்கப்படும் என்று கூறிவிட்டு வெளியேறினார்.

















# ‘மனசாட்சி’ நூல் வெளியீடு

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஒன்பதாவது பாராளுமன்றத்தில் பல்வேறு தலைப்புகளில் ஆற்றிய 54 உரைகளை உள்ளடக்கிய ‘மனசாட்சி’ என்ற நூல் இலங்கை மன்றக் கல்லூரி கேட்போர் கூடத்தில் புதன்கிழமை(25) அன்று மாலை வெளியிட்டு வைக்கப்பட்டது.

பல்லின மதத் தலைவர்கள், அரசியல்வாதிகள், சட்டத்தரணிகள் மற்றும் ஓய்வுபெற்ற ஜனாதிபதி செயலாளர்கள், ஊடகவியலாளர்கள் உட்பட ஏராளமானோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் வரவேற்புரையை பாதில் பாக்கீர் மாக்கார் நிகழ்த்தினார். நூல் குறித்து ஓய்வுபெற்ற சட்டமா அதிபரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான பாலித பெர்னாண்டோ, ஓய்வுபெற்ற ஜனாதிபதி செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சாலிய பீரிஸ் ஆகியோர் கருத்துரைகளை நிகழ்த்தினர். நன்றியுரையினை இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் நிகழ்த்தினார்.

### சூரிய மின் உற்பத்தியாளர்களின் மனுவை

# விசாரணைக்கு அழைக்க உத்தரவு

சூரிய மின் உற்பத்தியாளர்களுக்கு மின்சாரம் வாங்குவதற்கான கட்டணத்தைக் குறைப்பதற்கான அரசாங்கத்தின் முடிவை ரத்து செய்யக் கோரி சூரிய மின் உற்பத்தியாளர்கள் 17 பேர் தாக்கல் செய்த ரிட் மனுவை, உண்மைகளை உறுதிப்படுத்த ஆகஸ்ட் 04 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் புதன்கிழமை (25) உத்தரவிட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் பிரியந்த பெர்னாண்டோ முன் இந்த மனு விசாரணைக்கு வந்தது.

மனு விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் மனோகர டி சில்வா முன்வைத்த வாதங்களைக் கருத்தில் கொண்ட நீதியரசர்கள் அமர்வு, உண்மைகளை உறுதிப்படுத்த ஆகஸ்ட் 04 ஆம் திகதி மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உத்தரவிட்டது.

கூரை சூரிய மின் தகடுகள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை வாங்குவதற்கு மின்சார சபை மற்றும் லெகோ செலுத்தும் கட்டணங்களை ஜூலை முதல் திகதி முதல் தன்னிச்சையாகக் குறைக்க அமைச்சரவை முடிவு செய்துள்ளதாக மனுதாரர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

மின்சாரச் சட்டத்தின்படி, ஆணையத்தின் ஒப்புதல் தேவைப்பட்டாலும், அத்தகைய விலைக் குறைப்புக்கு பொதுப் பயன்பாட்டு ஆணையத்தின் ஒப்புதல் பெறப்படவில்லை என்றும் மனுதாரர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

சம்பந்தப்பட்ட கட்டணக் குறைப்பு



முடிவை செயல்படுத்த வேண்டாம் என்று பொதுப் பயன்பாட்டு ஆணையம் தங்களுக்குத் தெரிவித்துள்ளதாகவும், ஆனால் அது செயல்படுத்தப்படவில்லை என்றும் மனுதாரர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அமைச்சரவை முடிவை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு இந்த வழியில் கட்டணங்களைக் குறைக்க அரசாங்கம் எடுத்த முடிவு முற்றிலும் சட்டத்திற்கு முரணானது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். எனவே, இந்த முடிவை செல்லாததாக்க உத்தரவிடக் கோரும் மனுதாரர்கள், மனு விசாரிக்கப்படும் வரை கட்டணக் குறைப்பு முடிவை அமல்படுத்துவதைத் தடுக்க இடைக்காலத் தடை உத்தரவையும் கோருகின்றனர்.

# லொறி விபத்தில் இருவர் காயம்



ரஞ்சித் ராஜபக்ஷ

நானுஓயா-ரதல்ல குறுக்கு வீதியில் தேயிலை கொழுந்துகளை ஏற்றிச் சென்ற லொறி ஒன்று புதன்கிழமை (25) இரவு விபத்துக்குள்ளானதுடன், லொறியின் பின்புறத்தில் பயணித்த இருவர் காயமடைந்து நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நானுஓயா ஒலிபன்ட் தோட்டத்திலிருந்து நானுஓயா சமர்செட் தேயிலை தொழிற்சாலைக்குத் தேயிலை கொழுந்துகளை ஏற்றிச் சென்ற லொறியே இவ்வாறு சமர்செட் தோட்டப் பகுதியில் வைத்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

லொறியின் சாரதி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நுவரெலியா நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக தெரியவந்துள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் கூறியுள்ளனர்.

### குழந்தைக்கு

# சூடுவைத்த தாய்; இரண்டாவது கணவர் கைது

பாலித ஆரியவங்ச

ஊவா பரணகம, லுனுவத்த, அம்பிட்டிகொடவைச் சேர்ந்த 11 வயது மற்றும் 2 மாதக் குழந்தையைக் கொடூரமாகத் துஷ்பிரயோகம் செய்ததாக சந்தேகத்தின் பேரில், குழந்தையின் தாயும், தாயின் இரண்டாவது கணவரும் கடந்த 25ஆம் திகதி கைது செய்யப்பட்டதாக ஊவா பரணகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குழந்தையின் இடது கண்ணுக்குக் கீழே, கன்னம் பகுதியில், ஒரு கையில் மணிக்கட்டு அருகே மற்றும் வலது கையில் மேல் கைக்குக் கீழே தீக்காயங்கள் உள்ளிட்ட காயங்கள் இருந்ததாக பொலிஸார் கூறியுள்ளனர்.

குழந்தை தடயவியல் மருத்துவ பரிசோதனைக்காக வெலிமட மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட தாயும் இரண்டாவது கணவரும் வெலிமட நீதவான் நீதிமன்றத்தில் வியாழக்கிழமை (25) ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

பண்டாரவளை மூத்த பொலிஸ் கண்காணிப்பாளர் வழக்கறிஞர் ரோஷன் அமரசிங்கவின் அறிவுறுத்தலின் பேரில் ஊவா பரணகம, பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# போதைக்கு எதிராக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்

பு.கஜிந்தன்

சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினத்தையொட்டி சங்கானை பேருந்து நிலையத்திற்கு முன்பாக வியாழக்கிழமை (26) அன்று மாபெரும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போதைப்பொருள் பாவனை அதிகரித்து காணப்படுகின்ற நிலையில் அதன் தாக்கம் மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள், குடும்பத்தவர்கள் என சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவரிடத்திலும் மிகவும் மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது. இதனால் குடும்பங்களிடையே பல்வேறு விதமான பிரச்சினைகளும் ஏற்படுகின்றன.

இவ்வாறான பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்குப் போதைப்பொருள் பாவனையிலிருந்து அனைவரையும் மீட்கும் நோக்கில் இந்த விழிப்புணர்வு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தி, கோஷமிட்டவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினர் ஏற்பாடு செய்த இந்த ஆர்ப்பாட்டத்திற்கு சங்கானை பிரதேச செயலகத்தினர், வலிகாமம் மேற்கு பிரதேச சபையினர், சங்கானை பல நோக்கு கூட்டுறவு சங்கத்தினர், மானிப்பாய் பொலிஸார், வட்டுக்கோட்டை பொலிஸார், முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத்தினர், அந்திரான் தோல் பொருள் உற்பத்தி கூட்டுறவு சங்கத்தினர் மற்றும் பொதுமக்கள் என பலரும் ஆதரவு வழங்கியுள்ளனர்.





# மூளைச்சாவு அடைந்தவருக்கு அறுவை சிகிச்சை செய்த நிபுணர்

மூளைச்சாவு அடைந்து பல நாட்களான ஒருவருக்கு நரம்பியல் அறுவை சிகிச்சை செய்த மருத்துவர் நிபுணர் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இவரது கதைகளைக் கேட்கும் போது, இன்னும் என்னவெல்லாம் செய்திருப்பார் என நினைக்கத் தோன்றுகின்றது.

மூளைச்சாவு அடைந்த ஒருவருக்கு அறுவை சிகிச்சை செய்வது என்பது எகிப்திய பிரமிடிலிருந்து தோண்டி எடுக்கப்பட்ட மம்மிக்கு அறுவை சிகிச்சை செய்வது போன்றது. இந்த இரண்டு அறுவை சிகிச்சைகளிலும், நோயாளி எழுந்திருக்க மாட்டார். ஒரு மம்மிக்கு மூளை இல்லை. ஒரு மம்மி தயாரிக்கப்படும்போது, மூளை உட்பட அனைத்து உள் உறுப்புகளும் அகற்றப்படுகின்றன. இங்கே, மூக்கில் செருகப்பட்ட கொக்கி மூலம் மூளை அகற்றப்படுகிறது. எனவே, மூளை இருக்கும் இடத்தில் ஒரு வெற்றிடம் உள்ளது. மூளை இறந்திருக்கும் போது இதே போன்ற சூழ்நிலை நிலவுகிறது.

மூளை மண்டை ஓட்டில் இருந்தாலும், அது வேலை செய்யாது. இந்த நோயாளியில் செயல்படும் ஒரே முக்கிய உறுப்பு இதயம். மூளைச்சாவு அடைந்த நோயாளி ஒரு உயிர்காக்கும் இயந்திரத்துடன் இணைக்கப்பட வேண்டும். அது அகற்றப்பட்டவுடன், நோயாளி சுவாசிக்க முடியாது, முழு உடலும் இறந்துவிடும். பொதுவாக, மூளைச்சாவு அடைந்த நோயாளியின் கண்கள், இதயம், சிறுநீரகங்கள் மற்றும் கல்லீரல் போன்ற பிற ஆரோக்கியமான உறுப்புகளை அகற்றி மற்றொரு நபருக்கு மாற்றம் செய்யலாம்.

மூளை இறந்த நோயாளிக்கு அறுவை சிகிச்சை செய்ததாகக் குற்றப் புலனாய்வுத் துறை நீதிமன்றத்தில் தெரிவித்தது. எனவே, அந்தக் கதைக்கு குற்றப் புலனாய்வுத் துறை முழுப் பொறுப்பையும் ஏற்கிறது,

இலங்கையில் சுகாதாரம் ஒரு கடுமையான பிரச்சினையாக மாறி வருகிறது. அரசாங்கத்தை வடிவமைப்பது இந்த அரசாங்கத்தின் தவறு அல்ல, ஆனால் அதுதான் உண்மை என்பதால் நாங்கள் சொல்கிறோம். முந்தைய அரசாங்கத்தின் சுகாதார அமைச்சர் சிறைக்கு உள்ளேயும் வெளியேயும் நேரத்தை செலவிடுகிறார். அவர் மீது ஏராளமான குற்றச்சாட்டுகள் உள்ளன. தடுப்பூசி குப்பிகளில் தண்ணீரை நிரப்பி அதிக விலைக்கு விற்பது மற்றும் போலி மருந்துகளை வாங்குவது ஆகியவை அந்தக் குற்றச்சாட்டுகள். ஆனால், அவருக்கு எதிரான வழக்கு முடிவடையாததால், நீதிமன்றம் பதில் அளிக்கும் வரை அவர் இன்னும் நிரபராதி.

முன்னாள் சுகாதார அமைச்சின் செயலாளரும், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் சாட்சியமளித்த பின்னர் வியாழக்கிழமை(26) கைது செய்யப்பட்டார்.

இலங்கை மருந்துக் கூட்டுத்தாபனம் ஏற்கனவே கணிசமான அளவு மருந்துகளை உற்பத்தி செய்கிறது. இந்த மருந்துகள் அனைத்தும் பிராண்ட் பெயர்களில் அல்ல, அவற்றின் வேதியியல் பெயர்களில் வருகின்றன. ஆனால் சேனல் மருத்துவர்கள் அந்த மருந்துகளை நிராகரித்துவிட்டு வெளிநாட்டிலிருந்து அதே மருந்துகளின் பிரபலமான நகல்களைப் பயன்படுத்த அறிவுறுத்துகிறார்கள்.

மருந்துக் கூட்டுத்தாபனத்தின் ஒரு பாராசிட்டமால் மாத்திரை ஒரு ரூபாய்க்கு விலை என்றால், அந்த மருந்தின் பிரபலமான ஆங்கில தயாரிப்பு நூறு ரூபாய்க்கு விலை. இந்த மருந்துகளைப் பரிந்துரைப்பதன் மூலம், மருத்துவருக்கு ஒரு கமிஷன் கிடைக்கிறது. அதற்காக, மூளைச்சாவு அடைந்து பல நாட்களான ஒருவருக்கு நரம்பியல் சிகிச்சை செய்து சம்பாதித்தமை மிக ஈனத்தனமான செயலாகும்.

தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

மிகப் பெரிய திறமைசாலிகள் கூட, தங்களை வெளிப்படுத்தத் தயங்குகின்றனர். ஆனால், அநேகர் எந்தவொரு விடயத்திலும் தனித்துவம், தகுதி இல்லாமலே போலி விளம்பங்களால் மேடை ஏறுவதுமுண்டு.

சபையில் முதல் வரிசையில் இடம்பிடிக்க பெரும் பிரயத்தனப்படுவார்கள். அது கிடைக்காது விட்டால் சிச் சீ இந்தக் கூட்ட ஒழுங்குமுறை தவறு என சொல்லி வெளியே மெதுவாக நழுவிச் செல்வார்கள்.

போலி கௌரவம் தேடுபவர்களைச் சுற்றி இருப்பவர்கள் தெரிந்து கொள்வார்கள். இந்த உண்மை தெரிந்தும் கூட விடாப்பிடியாக தங்களைக் காட்டிக்கொடுக்க முனைபவர்களை என்ன என்பது?

சிறப்பான செயல்களை எவர் செய்தாலும் அவர்களை ஜனங்கள் புரிந்து கொள்வார்கள்.

உலக ஹேமத்திற்காக ஒரு பங்காளனாக வலிந்து சேவை செய்பவர் தங்களை மேம்படுத்தி, புகழ் தேடவிரும்பமாட்டார்கள். உலகம் பெரிது ஒவ்வொரு பிரஜையும் வேண்டப்பட்டவர்கள்! உலகப் பார்வை தீர்சண்யமானது.

–பருத்தியூர் பால.வைரவநாதன்



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

### பொருளாதார நெருக்கடியின் பின்னரான இலங்கை 26

# 1965: புதிய அரசாங்கமும் புதிய கொள்கைகளும்

1960களின் தொடக்கத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் முழுமையான தொழில் மயமாக்கலுக்கு முயற்சித்தது. இலங்கையின் தொழில் மயமாக்கலுக்கு இரண்டு முக்கிய வரம்புகள் இருந்தன. முதலாவது, நீர் மின்சாரம் இரண்டாவது, பெரும்பாலான நிறைவுப் பொருட்களுக்கான சந்தை சிறியதாக இருந்தது. எனவே, முடிவுப் பொருட்களை விற்பனை செய்ய இயலவில்லை. அதேவேளை, நவீன தொழில்துறைக்குத் தேவையான அனைத்து மூலப்பொருட்களும் இருக்கவில்லை. முந்தைய பரிசீலனை, உள்ளூர் விவசாய மூலப்பொருட்களை பதப்படுத்துவதையோ அல்லது இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களையோ அடிப்படையாகக் கொண்டு தொழில் இருக்க வேண்டும் என்று கூறியது. இலங்கையின் பாரம்பரிய ஏற்றுமதி பயிர்களின் பதப்படுத்தலை மேலும் விரிவுபடுத்துவதற்கான சில சாத்தியக்கூறுகளைத் தவிர, இதற்கான வாய்ப்புகள் குறைவாகவே இருந்தன.

இலங்கையின் மக்கள்தொகையின் சிறிய தன்மையும், இன்னும் குறைந்த தனிநபர் வருமான அளவும், உள்ளூர் சந்தைக்காக மட்டுமே உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களின் எண்ணிக்கையில் மிகவும் திட்டவட்டமான வரம்பை வைத்தது. அவ்வகையில், உடனடியாக, பொருளாதாரக் கொள்கை மூன்று மாற்றுகளை எதிர்கொள்ள நேர்ந்தது: 1.ஏற்கெனவே அடையப்பட்ட தொழில் மயமாக்கலின் அளவில் திருப்தி அடைவது, 2.தொடர்ந்து அதிகரித்து வரும் மானிய அளவுகள் தேவைப்படும் அதிகரித்து வரும் திறமையற்ற ஆலைகளைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து அழுத்தம் கொடுப்பது, 3.தொழில்துறை ஏற்றுமதிகளுக்கு வெளிநாட்டுச் சந்தைகளைத் தேடுவது.

முதல் இரண்டு மாற்று வழிகளும் ஏற்றுக்கொள்ள முடியாதவை. நியாயமான திறமையான தொழில்துறை துறைக்கான வாய்ப்புகள், இலங்கை அவர்கள் குறிக்கும் தன்னிச்சையான வடிவத்திலிருந்து தப்பித்து சர்வதேச உற்பத்தி வர்த்தகத்தில் நுழைவதைப் பொறுத்தது. அத்தகைய வர்த்தகம் வழக்கமான, பலதரப்பு வழிகளில் சாத்தியமில்லை. ஐம்பதுகளின் பிற்பகுதியிலும் அறுபதுகளின் முற்பகுதியிலும் இலங்கை அரசாங்கம் பல்வேறு சோசலிச சார்பு நாடுகளுடன் செய்து கொண்ட இருதரப்பு பண்டமாற்று ஒப்பந்தங்கள் இலங்கைக்கு வாய்ப்பாக அமைந்தன. ஒருவித பலதரப்பு பிராந்திய வர்த்தகம் மற்றும் கூட்டுறவு மேம்பாட்டு அமைப்பு உருவாகியிருந்தால் இலங்கைக்கு இது மிகச் சிறந்த தீர்வாக இருந்திருக்கும். இது வளர்ச்சியடையாத ஆசியாவின் பரந்த பிரிவில் வர்த்தகத்தைத் தூண்டவும் முதலீட்டு முறையை பகுத்தறிவுப்படுத்தவும் உதவியிருக்கும். துரதிர்ஷ்டவசமாக, இந்த வகையான ஏற்பாடு உருவாகும் உண்மையான வாய்ப்பு அறுபதுகளின் நடுப்பகுதியில் ஏற்படவில்லை. மொத்தத்தில், இலங்கையில் முழு அளவிலான தொழில்துறை வளர்ச்சிக்கு உள்ள தடைகள் வலிமையானவையாகவும் கடக்கக் கடினமானவையாகவும் இருந்தன. இந்தப் பின்புலத்தில் அரசாங்கம் பாரிய பொருளாதாரச் சவால்களை எதிர்நோக்கியது.

மார்ச் 1965 பொதுத் தேர்தலுக்காக, சி.பி.டி.சில்வா தலைமையிலான புதிதாக உருவாக்கப்பட்ட இலங்கை சுதந்திர சோசலிசக் கட்சியுடன் ஐ.தே.க. ஒரு தேர்தல் கூட்டணியை உருவாக்கியது. பிலிப் குணவர்தனவின் மகாஜன எக்சத் பெரமுனவும் அரசாங்கத்தில் பங்கேற்பதற்கும் ஒப்புக்கொண்டது மற்றும் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையிலான தமிழரசுக் கட்சியுடன் ஒரு ரகசிய ஒப்பந்தத்தையும் ஐ.தே.க. முடித்தது.

முந்தைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தால் ‘மூடப்பட்ட’ பொருளாதாரம் காரணமாக மக்கள் முன் இருந்த முக்கிய பிரச்சினை அன்றாட அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறை ஆகும். 1965 தேர்தல்தான் அரசாங்க பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் முடிவுகளின் நேரடி விளைவுகளை வாக்காளர்கள் எதிர்கொண்ட முதல் தேர்தலாகும். பண்டாரநாயக்கவின் பிரசாரக் கருப்பொருள், அவர் தனது மறைந்த கணவரின் கொள்கைகளை உண்மையாகப் பின்பற்றினார் என்பதாகும். இதன் அர்த்தம் தெளிவாக இல்லை. சி.பி.டி.சில்வா மற்றும் டபிள்யூ.தஹாநாயக்க போன்ற பண்டாரநாயக்கவுடன் நெருக்கமாகப் பணியாற்றிய ஆண்கள் இப்போது அவருக்கு எதிராகக் கும்பலாக இருப்பதைக் கண்டதால், இது நிச்சயமாக மக்களுக்கு நம்பமுடியாததாகத் தோன்றியது.

பெரிய கூட்டணியை ஐ.தே.க. உருவாக்கியிருந்தாலும் எந்த ஒரு கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட 145 இடங்களில், ஐ.தே.க. 66 இடங்களையும், ஸ்ரீலசுக 41 இடங்களையும், தமிழரசுக் கட்சி 14 இடங்களையும், தமிழ் காங்கிரஸ் 3 இடங்களையும், மகாஜன எக்சத் பெரமுன 1 இடத்தையும் வென்றது. மேலும், சில சுயேச்சை பாராளுமன்ற உறுப்பினர்களும் இருந்தனர். ஐ.தே.க தலைவரான டட்லி சேனநாயக்க, தமிழ்க் கட்சிகளினதும் பிற சிறிய குழுக்களினதும் ஆதரவுடன் ‘தேசிய அரசாங்கத்தை’ உருவாக்கினார். சி.பி.டி.சில்வா மீண்டும் நிலம், நீர்ப்பாசனம் மற்றும் மின்சாரம் அமைச்சராக நியமிக்கப்பட்டார். பிலிப் குணவர்தன தொழில்துறை அமைச்சரானார். டபிள்யு. தஹநாயக்க உள்துறை அமைச்சரானார், யு.பி.வன்னியநாயக்க நிதி அமைச்சராகவும், ஜே.ஆர்.ஜெயவர்தன இராஜாங்க அமைச்சராகவும் நியமிக்கப்பட்டனர். அரசாங்கம் பல்வேறு அரசியல் நலன்கள் மற்றும் அதிகாரத் தளங்களைக் கொண்ட நண்பர்கள் மற்றும் எதிரிகளின் விசித்திரமான கலவையாக இருந்தது. ஆனால், அவர்கள் அனைவரும் அதிகாரத்தைப் பயன்படுத்த ஒன்றிணைந்தனர். அரசாங்கத்திற்குப் பாராளுமன்ற ஆதரவை வழங்கிய கட்சிகளின் தலைவர்கள் சிலர் அமைச்சரவையில் இருந்து விலகி இருக்கத் தேர்ந்தெடுத்ததால், டட்லி சேனநாயக்க இந்தத் தலைவர்களையும் சில மூத்த அமைச்சரவை அமைச்சர்களையும் உள்ளடக்கிய பத்து பேர் கொண்ட குழுவை ஒரு சக்திவாய்ந்த அதிகாரப்பூர்வமற்ற அமைச்சரவையாக உருவாக்கினார். அதன் பன்முகத்தன்மை இருந்தபோதிலும், அரசாங்கம் அதிக அளவிலான ஒத்திசைவை உருவாக்க முடிந்தது மற்றும் அதன் முழு நாடாளுமன்ற காலத்தையும் நிறைவு செய்த முதல் நிறுவனமாக மாறியது.

தேர்தலில் நாட்டு மக்களின் தீர்ப்பு பொருளாதாரப் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், புதிய அரசாங்கம் நலிவடைந்த பொருளாதாரத்தைப் புத்துயிர் பெற வைக்கத் தீவிரமாகச் செயற்படுத்தத் தொடங்கியது. உலக வங்கியின் உதவி கோரப்பட்டது. மேலும், உணவு மானியங்கள் மற்றும் நலத்திட்டச் செலவினங்களைக் குறைத்தல் மற்றும் ரூபாயின் மதிப்பைக் குறைத்தல் போன்ற வழக்கமான உலக வங்கியின் பரிந்துரைகள் அதன் உதவிக்கான முன் நிபந்தனைகளாக பரிந்துரைக்கப்பட்டன. ஆனால் 1953ஆம் ஆண்டில் மத்திய வங்கியின் ஆலோசனையின் விளைவாக அரிசி மானியக் குறைப்புக்குப் பலியாகிவிட்ட சேனநாயக்க, உலக வங்கியின் நிபந்தனைகளுக்கு இணங்க விரும்பவில்லை. அதற்குப் பதிலாக அவர் அமெரிக்காவை நோக்கித் திரும்பினார். அமெரிக்க எண்ணெய் நிறுவனங்களுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பான சிக்கலான பிரச்சினையைத் தீர்த்து வைத்த பிறகு, அவர் அமெரிக்காவிற்குச் சென்று ஜனாதிபதி, லண்டன் ஜோன்சனை சந்தித்தார். இங்கும், சேனநாயக்காவுக்கு பெரிய உதவி எதுவும் கிடைக்கவில்லை. வெளிநாட்டு ஆதாரங்களால் ஏமாற்றமடைந்து, உலக அரிசி பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு, அவர் உள்நோக்கித் திரும்பி, அதிக விவசாய உற்பத்திக்காக நாட்டைத் திரட்ட முயன்றார். அவர் அதைப் பசுமைப் புரட்சி என்று அழைத்தார். இலங்கையின் ‘பசுமைப் புரட்சி’ கதையை நாம் விவரிக்கும் முன், அரசாங்கத்தின் பொதுவான பொருளாதார மற்றும் நிதிக் கொள்கைகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டியது அவசியம்.

அந்தக் காலகட்டத்தின் அரசாங்கத்தின் முக்கிய பொருளாதார நிபுணரான டாக்டர் காமனி கொரியாவின் வார்த்தைகளில், “அந்நிய செலாவணி நிலைமையைக் கையாள்வது, உண்மையில், அந்தக் காலகட்டத்தில் பொருளாதாரக் கொள்கையின் முக்கிய அக்கறையாக இருந்தது.” நுகர்வோர் பொருட்களின் பற்றாக்குறையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும், ஏராளமானவற்றின் ஒரு மாறுபட்ட சகாப்தத்தை முன்வைப்பதற்கும் அதன் உறுதிப்பாட்டுடன், முந்தைய அரசாங்கத்தால் கட்டப்பட்ட இறக்குமதி கட்டுப்பாடுகளின் கட்டிடத்தை அகற்ற வேண்டும் என்பதை ஐ.தே.க. அரசாங்கம் உணர்ந்தது. நாட்டின் வெளிநாட்டுச் சொத்துக்கள் ஒரு மாதத்திற்கும் குறைவான இறக்குமதிகளுக்குச் சமமாகக் குறைந்ததால், புதிய அரசாங்கம் முன்னெப்போதுமில்லாத அளவில் வெளிநாட்டுக் கடன்களை நாடியது, இதன் மூலம் வெளிநாட்டுக் கடன் சேவையின் மிகப் பெரிய சுமையை உருவாக்கியது.

1964இல், வெளிநாட்டு நிதிகள் மொத்த இறக்குமதியில் வெறும் 8% மட்டுமே நிதியளித்தன. ஆனால், அவை 1969இல் 40% ஆகவும் 1970இல் 49% நிதியளித்தன. பிந்தைய ஆண்டில், மொத்த வெளிநாட்டுக் கடன் ரூ.2,968 மில்லியனாக இருந்தது. இது அந்த ஆண்டிற்கான மொத்த ஏற்றுமதி வருவாயை விட அதிகமாக இருந்தது. 1970ஆம் ஆண்டிற்கான கடன் சேவை கட்டணம் (அதாவது மூலதனத்தைத் திருப்பிச் செலுத்துதல் - ‘கடன் நீக்கம்’ - வட்டியுடன் சேர்த்து)

ரூ.454 மில்லியனாகவும், கடன் சேவை விகிதம் (மூலதனம் மற்றும் வட்டியைத் திருப்பிச் செலுத்துவதன் மூலம் உறிஞ்சப்படும் அந்நியச் செலாவணி வருவாயின் விகிதம்) மொத்த ஏற்றுமதி வருவாயில் 20%ஆகவும் இருந்தது. இவ்வாறுதான் இலங்கையின் வெளிநாட்டுக்கடனின் கதை தொடங்கியது.

## கடிதங்கள்

### “பாலத்தை புனரமைத்து தாருங்கள்”

பதுளை மாவட்டத்தில் உள்ள ஊவா பரனகம மற்றும் ஹாலிஎல பகுதியை இணைக்கும் வகையில் கட்டப்பட்ட பாலம் இடிந்து விழும் நிலையில் உள்ளதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

375 அடி நீளமுள்ள இந்த பாலத்தின் பலகைகள் கடுமையாக சேதமடைந்துள்ளதுடன், இது குறித்து அதிகாரிகளுக்கு நீண்ட காலமாக அறிவிக்கப்பட்டிருந்தாலும், அதில் எந்தவித பலனும் இல்லையென அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஊவாபரகம, பம்பரபான, மெதி பொகுன, மாலகமுவ உள்ளிட்ட ஊவாபரகம தேர்தல் தொகுதியில் உள்ள பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள், இந்த விதியைப் பயன்படுத்தி வந்துள்ளனர்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இந்த பாலத்தைப் பார்வையிட வருகின்றதுடன், பழங்கால மதிப்புள்ள இந்தப் பாலத்தைப் பாதுகாக்கவும், அதைப் புனரமைக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– பாலித்த ஆரியவங்ச



கொமர்ஷல் வங்கியின் யாழ். கிளையில்

# முதல் பிரத்தியேக மகளிர் நிலையம்



கொமர்ஷல் வங்கி தனது மகளிர் வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்வதற்காக அர்ப்பணிப்புள்ள பெண் ஊழியர்களால் நிர்வகிக்கப்படும் அதன் முதலாவது பிரத்தியேக மகளிர் வங்கி நிலையத்தை ஆரம்பித்துள்ளது. இது பெண்களின் தனித்துவமான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வங்கியின் உறுதிப்பாட்டை வலுப்படுத்துகிறது.

'அணகி மகளிர் வங்கி நிலையம்' என்று பெயரிடப்பட்ட இந்த நிலையம், அண்மையில் யாழ். கிளையில் திறந்து வைக்கப்பட்டது. இது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் இலக்கம் 474இல் அமைந்துள்ளது.

பெண் வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட அணகி மகளிர் வங்கி நிலையம், தாய்மார்கள் பாலூட்டும் அறை, குழந்தைகள் விளையாடும் பகுதி, பிரத்தியேக அடகு பிரிவு, ஆலோசனை பிரிவு, சிற்றுண்டிச்சாலை உள்ளிட்ட சிறப்பு வசதிகளைக் கொண்டுள்ளது. மேலும், எந்தவொரு கொமர்ஷல் வங்கி கிளையிலும் வழங்கப்படும் முழு அளவிலான நிதி தயாரிப்புகள் மற்றும் சேவைகளையும் வழங்குகிறது.

இந்த முயற்சியின் மூலம், வங்கி பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றிற்கான அதன் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறது, அதேபோல, பாலின சமத்துவத்தை ஊக்குவிப்பதற்கும் பெண்களை வலுப்படுத்துவதற்குமான அதன் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துவதாக வங்கி தெரிவித்துள்ளது. பிரத்தியேகமான 'அணகி மகளிர் வங்கி நிலையம', பெண்கள் எதிர்கொள்ளும் தேவைகள், விருப்பங்கள் மற்றும் சவால்களுக்கு ஏற்ப பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட ஒரு தனித்துவமான சூழலை உருவாக்குவதன் மூலம் பாரம்பரிய வங்கி முறைக்கு அப்பால் சென்று, விரிவான வங்கி சேவைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

'அணகி மகளிர் வங்கி நிலையத்தின்' திறப்பு விழாவில் கொமர்ஷல் வங்கியின் மனிதவள முகாமைத்துவ பிரதிப் பொது முகாமையாளர் இசுறு திலகவர்தன மற்றும் வங்கியின் சிரேஷ்ட மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் கலந்து கொண்டு, இந்த மைல்கல் முயற்சியின் மூலோபாய முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டினர்.

செலிங்கோ லைஃப்பின்

# 43 விற்பனை அதிகாரிகளுக்கு டிப்ளோமா பட்டம்




இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்தால் (SLIM) ஆயுள் காப்புறுதி சந்தையில் முன்னணியில் திகழும் நிறுவனத்திற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு திட்டத்தின் கீழ், செலிங்கோ லைஃப்பின் 43 விற்பனை அதிகாரிகள் குழு அண்மையில் நிதியியல் விற்பனை முகாமைத்துவத்தில் டிப்ளோமாக்களைப் பெற்றது.

நிதியியல் திட்டமிடல், தொடர்பாடல், பகுப்பாய்வு திறன் அபிவிருத்தி, நேர முகாமைத்துவம், நிதியியல் சந்தைகள் மற்றும் வரிவிதிப்பு போன்ற பாடங்களை உள்ளடக்கிய இந்த விசேடத்துவமான டிப்ளோமா பாடநெறியானது, செலிங்கோ லைஃப் நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் விற்பனை ஊழியர்களின் திறன்கள், அறிவு மற்றும் ஆற்றலை மேம்படுத்துவதும் முதன்மையான சந்தைகளில் நுழைந்து வாடிக்கையாளர்களுக்கு விதிவிலக்கான சேவைகளை வழங்கக்கூடிய மிகவும் திறமையான விற்பனை குழுவினரை விருத்தி செய்வதும் இதன் நோக்கமாகும்.

ஒன்பது மாத பாடநெறி திட்டத்தில் சமகால பாடநெறிகள், பரீட்சைகள் மற்றும் பிரதிநிதிகளுக்கு நன்கு முழுமையான கல்வியை உறுதி செய்வதற்கான பணிகள் ஆகியவை அடங்கும்.

பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய செலிங்கோ லைஃப் நிறைவேற்றுப் பணிப்பாளரும் பிரதம செயற்பாட்டு அதிகாரியுமான சமித ஹேமசந்திர, நிறுவனமானது அதன் ஆரம்ப காலத்தில் இருந்தே அதன் விற்பனைக்குழு உறுப்பினர்களிடையே தொழில்முறையை வளர்ப்பதற்கும் வெகுமதி அளிப்பதற்கும் சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது என்றார். "எமது விற்பனை நிபுணர்களை டிஜிட்டல் கருவிகளால் சித்தப்படுத்துவதில் நாம் முனைப்புடன் இருந்ததுடன், ஆயுள் காப்புறுதி தொடர்பான முன்னணி சர்வதேச அமைப்புகளிடமிருந்து தொழில்முறை தகுதிகளைப் பெறவும், மில்லியன் டொலர் வட்ட மேசை உறுப்பினர் தகைமையைப் பெறவும், மற்றும் நிதியியலில் அவர்களின் அறிவை மேம்படுத்தவும் அவர்களை ஊக்குவித்தோம்" என்று அவர் கூறினார். 'இதன் விளைவாக, அவர்கள் சமூகம் மற்றும் அவர்களது சகாக்களின் கௌரவத்தைப் பெற்றுள்ளதுடன் மேலும் செலிங்கோ லைஃப் மூலம் நிலையான மற்றும் இலாபகரமான தொழில்சார் நிலைகளை உருவாக்கியுள்ளனர்.

SLIM தலைவர் பேராசிரியர் ஜெயந்த என்.தேவசிறி தெரிவிக்கையில்,

"எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கும் வகையில் தொழில்சார் திறனை மேம்படுத்துவது SLIMஇன் நோக்கங்களில் ஒன்றாகும். இதை மேம்படுத்தும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான இலங்கையர்களுக்கு நாம் தொழில்முறை கல்வியை வழங்குவதுடன் மேலும் தொழில்முறை மேம்பாட்டின் மூலம் அதன் விற்பனை அதிகாரிகளின் தொழில் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான செலிங்கோ லைஃப்பின் முயற்சிகளை ஆதரிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம். இது மற்றைய நிறுவனங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்."

செலிங்கோ லைஃப் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற மேற்படி பட்டமளிப்பு விழாவில் செலிங்கோ லைஃப்பின் சிரேஷ்ட பணிப்பாளர்களான தேவன் கூரே மற்றும் பாலித ஜெயவர்தன, பணிப்பாளரும் பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ரங்க அபேநாயக்க, SLIM கல்வி மற்றும் ஆய்வு துணைத் தலைவர் டாக்டர் தில்ஹான் சம்பத் ஜெயதிலக்க,பிரதம நிறைவேற்றதிகாரி சமில் விக்ரமசிங்க உள்ளிட்டோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

2025ஆம் ஆண்டில் தொடர்ந்து 19ஆவது ஆண்டாக மக்களின் ஆயுள் காப்புறுதி சேவை வழங்குநராக வாக்களித்தது, தொடர்ந்தும் இரண்டாவது ஆண்டாக 2023இல் இலங்கையின் 'ஆண்டின் சிறந்த வர்த்தக நாமமாக' தெரிவு செய்யப்பட்ட செலிங்கோ லைஃப் இலங்கையில் மிகவும் போற்றப்படும் 10 நிறுவனங்களில் ஒன்றாக பெயரிடப்பட்டது. 2023இல் இலங்கை சர்வதேச வர்த்தக சம்மேளனம் (ICCSL) இல் பட்டய மேலாண்மைக் கணக்காளர் நிறுவனத்துடன் (CIMA) ஒத்துழைப்பு மற்றும் இரண்டிலும் 'இலங்கையில் மிகவும் மதிப்புமிக்க காப்புறுதி வர்த்தக நாமம்' என்று பிராண்ட் ஃபைனான்ஸ் மூலம் தரவரிசைப்படுத்தப்பட்டது.

# நீயே நானாக...



மடி நிறைய உன் முகம்
மாப்பிள்ளை தோரணையில்
அந்தியை பூட்டுகிறேன்..!

தளும்பி வழியும் தொடுகையில்
நிரப்பிக் கொள்ளும் கரிசனை
முக்காலத்தின் மிச்சம்..!

பற்றிப் பிடித்தலும்
விட்டு விலகுவதும்
அவரவர் ரசனைக்கு விடுதலை..!

தூர்ந்து கொண்டிருக்கும்
இந்த பூமியில்
இந்தப்பூமியில் வாழ்ந்ததைத்
தவிர வேறு ஏதும் பெரிதாக
செய்யவில்லை நாம்..!

வா.....
எழுந்து
கொஞ்சத் தூரமாவது
எங்கள் கதையளந்து
நடப்போம்..!

ஒன்று மட்டும்
பின் நாட்களில்
நம் எச்சங்களுக்கு
எந்த குறிப்புகளையும்
நீயும் குறித்து வைக்காதே
நானும் வைக்கவில்லை..!

அவர்கள் காலத்தில்
அவர்களே
முன்னோடிகளாகட்டும்..!

- காரையன் கதன்

# நான் நல்லவள் அல்ல...

நீங்கள் நல்லவர்
மிக்க

உங்கள்
பேச்சில் வழிகிற தேனை
நக்கிக் கொள்கிறார்கள்
உங்கள் நண்பர்களில் பலர்
செவிகளைக் குளிர்மை கொள்ள
வைக்கும் திறமையான
பேச்சு உங்களது

நீங்கள் நல்லவர்
மிக்க

வெளித்தோற்ற அழகும்
தொடர்பு றும் அழகும்
லாவண்யமானது

நீங்கள் நல்லவர்
மிக்க

உங்களுக்குள் ஒரு சாத்தான்
விழித்திருக்கிறது
அது தண்ணீருக்குள்ளால்
நெருப்பைக் கொண்டு போகும்
வல்லமை மிக்கதென
நண்பர் சொன்னார்
அவர் இப்போது அறிந்தவற்றை
நான் எப்போதோ
அறிந்திருப்பது பற்றி
அவருக்குத் தெரியாது

சாத்தான்கள்
எதை வேண்டுமானாலும்
செய்யும்
இல்லாத ஒன்றை
இருப்பதாகக் கூறும்..!

முகஸ்துதி செய்து செய்து
மோசடி செய்யும்
காலைப் பிடிக்கும்
வாலை நக்கும்
புகழ்ந்து மயக்கும்
குண்டியையும் கழுவும்..!

என் எழுத்துக்களின் மீதாணையாக
நான் நல்லவளாக இல்லை

கால்களைப் பிடிக்கவும்
குண்டிகளைக் கழுவவும்
எனக்குள்
அருவருப்பான சாத்தான்கள்
குடியிருக்கவில்லை
என்பதனால்...

- அஷ்ரபா நூர்தீன்



# கனாக் காலம்

மரத்தின் கீழிருந்து சீராக
முடி வெட்டி கூசும் தலை
கழுவி நன்றாக நீராடி
தலை துவட்டி பவுடர் பூசி

சேவல் துரத்தி தடியெறிந்து
அதைப்பிடித்து கறிசமைத்து
மணக்க மணக்க உறவுகூடி
உண்டு கழித்த காலம் வருமோ..!

இனிய பாலைப் பழம் தேடி
காடு முழுவதும் சென்ற காலம்
இதயம் முழுவதும் இனிக்கிறது
மாற்றம் தேடித் தேடி மனமெல்லாம்
பழைய நினைவுகளை நினைக்கிறது..!

சைக்கிள் வாங்க எண்ணி
பணம் கட்டி காத்திருந்து அதுவர
அகமகிழ்ந்து அகமகிழ்ந்து அதுபழகி
தினமும் திளைத்து மகிந்த காலம்
மீண்டும் வருமோ
காத்திருப்போம்..!

- க.யோகானந்தன்





இடமிருந்துவலம் – ரிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி பிஎல்சியின் உள்நாட்டு உற்பத்தி மற்றும் விநியோக பிரிவின் நிதிக் கட்டுப்பாட்டாளர் நிலன்த விதானகே, ஆர்பிடெக் (பிரைவட்) லிமிடெட்இன்நிறுவன விற்பனைகள் சிரேஷ்ட தலைமை அதிகாரி ஹிரான் டி சில்வா, ஆர்பிடெக் (பிரைவட்) லிமிடெட் இன்உற்பத்தி பிரதி பொது முகாமையாளர் ஜயனாதஅல்விஸ், ஆர்பிடெக் (பிரைவட்) லிமிடெட் இன்விற்பனை பிரதி பொது முகாமையாளர் பிரதீப் ஜயவீர, ரிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி பிஎல்சியின் உள்நாட்டு உற்பத்தி மற்றும் விநியோக பிரிவின் முகாமைத்துவ பணிப்பாளர் லலித்விஜேயசிங்க, ரிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி பிஎல்சியின் உள்நாட்டு உற்பத்தி மற்றும் விநியோக பிரிவின்சந்தைப்படுத்தல் தலைமை அதிகாரி டெரிக் பெரேரா, ஆர்பிகோ தளபாடங்கள் பிரிவின் பொது முகாமையாளர் ருவன் குமார, ஆர்பிடெக் (பிரைவட்) லிமிடெட் இன்சந்தைப்படுத்தல் முகாமையாளர் ஜனக பிரியங்கர.

# ஆர்பிகோ NextGen மெத்தைகளை அறிமுகம்

இலங்கையின் மெத்தைகள் தொழிற்துறையில் நீண்ட காலமாக முன்னோடியாகத் திகழும் ஆர்பிகோ, *air cooling pocket* தொழினுட்பத்துடனான *NextGen* மெத்தை தெரிவுகளை அண்மையில் அறிமுகம் செய்துள்ளது. உள்நாட்டு சந்தையில் புத்தாக்கமான இந்த மெத்தை தெரிவுகளின் அறிமுகம், கொழும்பு *Ramada by Wyndham* இல் 2025 ஜூன் 13ஆம் திகதி நடைபெற்றது.

ரிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி பிஎல்சியின் உள்நாட்டு உற்பத்தி மற்றும் விநியோகப் பிரிவின் முகாமைத்துவ பணிப்பாளர்லலித் விஜேயசிங்கவினால் அறிமுகம் செய்யப்பட்ட இந்த *Arpico NextGen* தெரிவுகளினூடாக, சமூகங்களுக்கு உயர் உறக்கத் தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதற்கான ஆர்பிகோவின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. புதிய மெத்தைகளின் அறிமுகத்துடன், சிறந்த உறக்கத்துக்கான உரிய சூழலை ஏற்படுத்திக் கொடுக்கும் அதன் நோக்கத்தை வெளிப்படுத்தியுள்ளமை மட்டுமல்லாது, முன்னேற்றகரமான புத்தாக்கத்துக்கான உறுதி மொழியையும் மீள உறுதி செய்துள்ளது.

இந்த புதிய மெத்தை தெரிவுகளில்*Profile cut air-cooling pocket* தொழினுட்பம் உள்ளடங்கியுள்ளதுடன், நவீன வசதிகள் படைத்த *German Computer Numerical Control (CNC)* ஃபோம்வெட்டும் தொழினுட்பத்தைக் கொண்டு, சிறந்த குளிர்விப்பு மற்றும் மெத்தையின் புத்துணர்வூட்டும் கட்டமைப்பு ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில் அமைந்துள்ளன. அதனூடாக உறக்கத்தின் தரம் வினைத்திறனான வகையில் மேம்படுத்தப்பட்டுள்ளது. முறையான உறக்கத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, *Arpico NextGen* இல் பயன்படுத்தப்பட்டுள்ள நவீன தொழினுட்பத்தினூடாக சிறந்த ஓய்வு வழங்கப்படுவதுடன், உறங்குவோருக்குப் புத்துணர்வுடன் உறக்கத்திலிருந்து எழும் வகையிலான அம்சங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

ரிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி பிஎல்சியின் உள்நாட்டு உற்பத்தி மற்றும் விநியோகப் பிரிவின் முகாமைத்துவ பணிப்பாளர் லலித் விஜேயசிங்க கருத்துத் தெரிவிக்கையில், "தரமான உறக்கத்தினூடாக, உற்பத்தித்திறன் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை மேம்படுத்தப்படுகிறது என்பதில் நாம் உறுதியான நம்பிக்கையைக் கொண்டுள்ளோம். எமது தவிசாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி/ முகாமைத்துவ பணிப்பாளர், கலாநிதி. சேன யத்தெஹிகே அவர்களின் நோக்கத்துக்கமைய, ஆர்பிகோவைச் சேர்ந்த எமது பணிகளினூடாக, எமது வாடிக்கையாளர்களுக்கு ஒப்பற்ற விற்பனை அனுபவத்தைப் பெற்றுக் கொடுப்பது மாத்திரமன்றி, தமது தினசரி வாழ்க்கையில் சிறப்பாக இயங்குவதற்கு அவசியமான தரமான உறக்கத்தைப் பெற வசதியை வழங்குவதாகவும் அமைந்துள்ளது. அதற்காக, எமது தயாரிப்புகளைப் புத்தாக்கமான வகையில் வடிவமைப்பதில் தொடர்ச்சியான முயற்சிகளில் முதலீடுகளை மேற்கொள்வதுடன், புதிய மற்றும் வளர்ந்து வரும் தொழினுட்பங்களைப் பயன்படுத்தி, வாடிக்கையாளர்களுக்கு அவசியமான உறக்கத் தீர்வுகளை வழங்குகிறோம்" என்றார்.



ரிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி பிஎல்சியின் உள்நாட்டு உற்பத்தி மற்றும் விநியோக பிரிவின் முகாமைத்துவ பணிப்பாளர் லலித் விஜேயசிங்க, ஆர்பிகோ NextGen மெத்தைகளை அறிமுகம் செய்கிறார்.



ரிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி பிஎல்சியின் உள்நாட்டு உற்பத்தி மற்றும் விநியோக பிரிவின் சந்தைப்படுத்தல் தலைமை அதிகாரி டெரிக் பெரேரா, ஆர்பிகோ NextGen மெத்தைகள் அறிமுக நிகழ்வில் வரவேற்புரை ஆற்றுகிறார்.

பொலியுர்தீன் ஃபோம் மற்றும் ஸ்பிரிங் மெத்தைகள், ஷீட்கள், குஷன்கள் மற்றும் சிலிக்கன் ஃபைபர் தலையணைகள் உற்பத்தியில் முன்னோடியாகத் திகழும் ஆர்பிடெக் (பிரைவட்) லிமிடெட், நான்கு தசாப்த கால கூட்டாண்மை அனுபவத்தைத் தன்வசம் கொண்டுள்ளது. பெருமைக்குரிய *ISO* 9001-2015 நியமத்தை பெற்றுள்ளதுடன், தனது புகழ்பெற்ற ஆர்பிபோமுக்காக *SLS* நியமத்தை ஆர்பிகோ பின்பற்றுகின்றது. நம்பிக்கையை வென்ற நாமமாக ஆர்பிடெக் (பிரைவட்) லிமிடெட் திகழ்வதுடன், தனது தற்போதைய தாய் நிறுவனமான ரிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி பிஎல்சியிடமிருந்து ஒன்பது தசாப்த கால வரலாற்றைக் கொண்டுள்ளது.
1932ஆம் ஆண்டில் எரிபொருள் நிரப்பு நிலையம் என்பதிலிருந்து ஆரம்பித்த ரிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி, நாட்டின் முன்னணி பன்முகப்படுத்தப்பட்ட நிறுவனமாக வளர்ச்சியடைந்து, விற்பனை, பெருந்தோட்டங்கள், இறப்பர், தளபாடங்கள், டயர்கள், பிளாஸ்ரிக்கள், காப்புறுதி, பங்கு முகவர், நிதிச் சேவைகள் மற்றும் சரக்குக் கையாளல் போன்ற பிரிவுகளில் பிரசன்னத்தைக் கொண்டுள்ளது. கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டுள்ள மாபெரும் நிறுவனங்களில் ஒன்றாகத் திகழ்வதுடன், சிறந்த வருடாந்த புரள்வையும் கொண்டுள்ளது.



இடமிருந்துவலம் – ரிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி பிஎல்சியின் உள்நாட்டு உற்பத்தி மற்றும் விநியோக பிரிவின் நிதிக் கட்டுப்பாட்டாளர் நிலன்த விதானகே, ஆர்பிடெக் (பிரைவட்) லிமிடெட்டின் நிறுவன விற்பனைகள் சிரேஷ்ட தலைமை அதிகாரி ஹிரான் டி சில்வா, ஆர்பிடெக் (பிரைவட்) லிமிடெட் இன்உற்பத்தி பிரதி பொது முகாமையாளர் ஜயனாதஅல்விஸ், ஆர்பிடெக் (பிரைவட்) லிமிடெட் இன்விற்பனை பிரதி பொது முகாமையாளர் பிரதீப் ஜயவீர, ரிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி பிஎல்சியின் உள்நாட்டு உற்பத்தி மற்றும் விநியோக பிரிவின் முகாமைத்துவ பணிப்பாளர் லலித்விஜேயசிங்க,ரிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி பிஎல்சியின் உள்நாட்டு உற்பத்தி மற்றும் விநியோக பிரிவின் சந்தைப்படுத்தல் தலைமை அதிகாரி டெரிக் பெரேரா, ஆர்பிகோ தளபாடங்கள் பிரிவின் பொது முகாமையாளர் ருவன் குமார, ஆர்பிடெக் (பிரைவட்) லிமிடெட்டின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் ஜனக பிரியங்கர.

# Sri Lanka FinTech மாநாடு செப்டெம்பரில் ஆரம்பம்




*Tecxa* தனியார் நிறுவனம், டிஜிட்டல் பொருளாதார அமைச்சு, நிதி மற்றும் பொருளாதார திட்டமிடல் அமைச்சு, HNB வங்கி மற்றும் இலங்கை பிணைய நிதி சங்கம் (*Sri Lanka Fintech Forum*) ஆகியவற்றுடன் இணைந்து, 2025 Sri Lanka FinTech மாநாட்டை எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளது.

"Empowering Sri Lanka's Digital Economy: Innovations Driving Financial Inclusion and Growth" என்ற கருப்பொருளின் கீழ் செப்டம்பர் 24 மற்றும் 25 ஆகிய திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது. 25க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து 2,000க்கும் அதிகமான பங்கேற்பாளர்கள் இதில் கலந்துக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த இரண்டு நாள் மாநாடு ஆறு முக்கிய தலைப்புகளை மையமாகக் கொண்டு நடைபெற உள்ளது. நிதித்துறையின் எதிர்காலம், சர்வதேச மற்றும் பிராந்திய போக்குகள், Blockchain, செயற்கை நுண்ணறிவு (AI) Crypto நாணயங்கள் போன்ற புத்தாக்க தொழில்நுட்பங்கள், நிதி கண்டுபிடிப்புகள் மற்றும் உள்ளடக்கம், சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறை நெறிமுறைகள், முதலீடுகள் மற்றும் ஆரம்ப நிறுவன வளர்ச்சி போன்ற முக்கியமான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளன. மேலும், இந்த தலைப்புகள் மாநாட்டின் ஐந்து வெவ்வேறு இடங்களில் நடைபெறும் பல்வேறு அமர்வுகளில் கலந்துரையாடப்படும். இம்மாநாட்டில் *FinTech* நிறுவனங்களின் நிறுவனர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், வங்கித் துறையினர், தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் பங்கேற்க உள்ளனர்.

இந்த மாநாடு குறித்து கருத்து தெரிவித்த டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன, "இலங்கை அதன் டிஜிட்டல் மாற்றப் பயணத்தில் ஒரு தீர்மானம் மிக்க தருணத்தில் உள்ளது. 2030க்குள் 15 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள டிஜிட்டல் பொருளாதாரத்தை நோக்கி நாங்கள் பணியாற்றும் போது, இலங்கை *FinTech* மாநாடு 2025 போன்ற மேடைகளை உருவாக்குவது முக்கியமானது. இது புத்தாக்கத்தை வெளிக்கொணர்வதற்கும், மூலோபாய உத்திகளை உருவாக்குவதற்கும், முதலீட்டை ஈர்ப்பதற்கும், முன்னேறிய ஒழுங்குமுறை கட்டமைப்புகளை வடிவமைப்பதற்கும் உதவுகிறது. இந்த மாநாடுஅரசாங்கம், தொழில்துறை மற்றும் உலகளாவிய பங்காளர்களுக்கிடையே உரையாடலை ஊக்குவிக்கிறது. இது இன்றைய இடைவெளிகளை நிரப்பவும், நாளைய டிஜிட்டல் உட்கட்டமைப்பை நோக்கமும் துல்லியமும் கொண்டு கட்டமைக்கவும் நம்மை ஊக்குவிக்கிறது," எனதெரிவித்தார்.

இது குறித்து Fintech Forum of Sri Lanka-வின் தலைவர் சன்ன டி சில்வா கருத்து தெரிவிக்கையில், 'நிதித் துறையின் எதிர்காலம் டிஜிட்டல்மயமாக்கல் ஆகும். இலங்கை அதைப் பின்பற்றுவதோடு மட்டுமல்லாமல் அதற்கு தலைமைத்துவமும் வழங்க வேண்டும். இந்த மாநாடானது மத்திய வங்கியின் டிஜிட்டல் நாணயம் (CBDC) பரிசோதனை மற்றும் நிதித் தரவுகளைப் பாதுகாப்பாகப் பகிர்வதற்கு அனுமதிக்கும் திறந்த வங்கி முறைமை போன்ற புதிய நிதித் தொழில்நுட்பங்களுக்கான தெளிவான மற்றும் உறுதியான சட்டங்கள் மற்றும் வழிகாட்டுதல்களை உருவாக்க உதவும் என நம்புகிறோம். 2030 ஆம் ஆண்டளவில் இலங்கையில் உள்ள அனைவருக்கும் நிதிச் சேவைகளை அணுகக்கூடியதாக இருப்பதை உறுதிசெய்ய சர்வதேச கூட்டாண்மைகளை உருவாக்கவும் இது உதவும். மேலும், இலங்கையை தெற்காசியாவின் முன்னணி டிஜிட்டல் நிதி மையமாக மாற்றுவதே இதன் நோக்கமாகும்' என்று தெரிவித்தார்.

இந்த மாநாடு நடைபெறுகின்ற காலப்பகுதியில் 100 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேற்பட்ட நேரடி வெளிநாட்டு முதலீட்டைப் பெறுவதும், 2030 ஆம் ஆண்டளவில் ஆண்டுதோறும் 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை நேரடி வெளிநாட்டு முதலீடுகளாகப் பெற்றுக்கொள்வதும் ஏற்பாட்டாளர்களின் நோக்கமாகும். மேலும், இந்த முதலீடுகள் 95% நிதி உள்ளடக்கத்தை அடைவதற்கும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3% பங்களிப்பை வழங்குவதற்கு நிதித் தொழில்நுட்பத் துறையை மேம்படுத்துவதற்கும், 2030 ஆம் ஆண்டளவில் 200க்கும் மேற்பட்ட உள்நாட்டு *FinTech* நிறுவனங்களுக்கு ஆதரவு வழங்கவும் வழிவகுக்கும்.

'இந்த மாநாடு பற்றி கருத்து தெரிவித்த *HNB* இன் முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி தமித் பல்லேத்த, 'நிதிச் சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்துவதன் மூலமும், புத்தாக்கங்கள் மற்றும் முதலீடுகளுக்கான புதிய வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலமும் இலங்கையின் பொருளாதாரத்தை வளர்ப்பதற்கு FinTech அர்ப்பணிப்புடன் செயல்படுகிறது. இந்த முக்கியமான மாநாட்டிற்கு பங்களிப்புச் செய்வதிலும், வலுவான, மேலும், டிஜிட்டல் இலங்கையை உருவாக்க உதவுவதிலும் HNB பெருமை கொள்கிறது' என கூறினார்.

மேலும், இந்த மாநாட்டுக்கு முன்னதாக, Sri Lanka FinTech மாநாட்டின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை அறிமுகப்படுத்தும் விசேட நிகழ்வு ICTA கேட்போர் கூடத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.



இந்தியா

### கூட்டறிக்கையில் கையெழுத்திட

# மறுத்தது இந்தியா

சீனாவின் ஷான்டாங் மாகாணத்தில் குயிங்டாவோ நகரத்தில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு சார்பில் பாதுகாப்பு மந்திரிகளுக்கான உச்சி மாநாடு, வியாழக்கிழமை (26) அன்று நடைபெற்றது. இதில் உறுப்பு நாடுகளை சேர்ந்த பாதுகாப்பு மந்திரிகள் பங்கேற்றுள்ளனர்.

இந்நிலையில், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் கூட்டறிக்கையில் கையெழுத்திட மத்திய பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் மறுத்து விட்டார் என தகவல் வெளியாகியுள்ளது.

இதுபற்றி வெளியான தகவலில், கடந்த ஏப்ரல் 22ஆம் திகதி இடம்பெற்ற பஹல்காம் பயங்கரவாத தாக்குதலை சீனா மற்றும் பாகிஸ்தான் நாடுகள் விடுத்து விட்டு, பாகிஸ்தானில் நடந்த ஜாபர் எக்ஸ்பிரஸ் தாக்குதலை கூட்டறிக்கையில் சேர்க்க முனைந்துள்ளன. ஆனால், பயங்கரவாதம் தொடர்புடைய விவகாரத்தில் இரட்டை நிலைப்பாடு இருக்க முடியாது என மத்திய அமைச்சர் தெளிவுப்படுத்திவிட்டார்.



இந்த விவகாரத்தில், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உறுதுணையாக நிற்க வேண்டியது முக்கிய என அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. சிங் கையெழுத்திட மறுப்பு தெரிவித்து விட்ட நிலையில், கூட்ட முடிவில் கூட்டறிக்கை வெளியிடப்படாது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கர்நாடகா

### ஒகேனக்கல் அருவிகளில்

# குளிக்க தடை

ஒகேனக்கல் அருவிகளில் சுற்றுலாப்பயணிகள் குளிக்கவும், பரிசல் இயக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கர்நாடகத்தில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்து பெய்து வருவதன் காரணமாக கபினி, கிருஷ்ணராஜசாகர் (கே.ஆர்.எஸ்.), ஹாரங்கி, ஹேமாவதி அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால் அணைகளின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்துள்ளது.

இதையடுத்து, புதன்கிழமை (25) கே.ஆர்.எஸ். அணையிலிருந்து வினாடிக்கு 36 ஆயிரம் கன அடியும், கபினி அணையில் இருந்து வினாடிக்கு 25 ஆயிரம் கன அடியும் உபரிநீர் திறக்கப்பட்டது.

திருமகூடலு சங்கமத்தில் ஒன்றாக சங்கமித்து தமிழகம் நோக்கி காவிரியில் பாய்ந்தோடி வருகிறது. அதன்படி புதன்கிழமை (25) நிலவரப்படி வினாடிக்கு 61 ஆயிரம் கன அடி நீர் தமிழகம் நோக்கி வந்தது. இதனால் நஞ்சன்கூடு, டி.நரசிப்புரா, கொள்ளேகால் பகுதிகளிலும் காவிரி கரையோர கிராமங்களில் வெள்ளம் சூழ்ந்தது.



இதையடுத்து, பாதுகாப்பு நடவடிக்கையாக ஸ்ரீரங்கப்பட்டணா, ஹலகூர் ஆகிய பகுதிகளில் சுற்றுலா தலங்களை மூட உத்தரவிடப்பட்டது.

இந்நிலையில், தமிழக எல்லையான பிலிகுண்டுலுவுக்கு நீர்வரத்து 24,000 கன அடியாக உயர்ந்துள்ளது.

இதனால் ஒகேனக்கல் அருவிகளில் சுற்றுலாப்பயணிகள் குளிக்கவும், பரிசல் இயக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. தற்போது நிலைவரப்படி கபினி, கிருஷ்ணராஜ சாகர் அணைகளில் இருந்து தமிழகத்துக்கு 60,000 கனஅடி நீர் திறக்கப்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இராணுவ பலத்தை அதிகரிக்க

# நேட்டோ நாடுகள் முடிவு



இராணுவ பலத்தை அதிகரிக்க நேட்டோ நாடுகள் முடிவு செய்துள்ளன.

அமெரிக்கா உள்ளிட்ட 32 நாடுகள் இணைந்த நேட்டோ அமைப்பின் வருடாந்த மாநாடு நெதர்லாந்து நாட்டின் தி ஹேக் நகரில் நடைபெற்றது. இதில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உட்பட உறுப்பு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

உலக அளவில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்திய இந்த மாநாட்டில் பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன. முக்கியமாக, நேட்டோ நாடுகளின் இராணுவ செலவினத்தை அதிகரிப்பது குறித்து விவாதிக்கப்பட்டது.

குறிப்பாக, உறுப்பு நாடுகள் தங்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜி.டி.பி.) 5 சதவீதத்தை இராணுவத்துக்கு செலவிட வேண்டும் என ட்ரம்ப் வலியுறுத்தி இருந்தார். இது குறித்து கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

முடிவில் இந்த பரிந்துரைக்கு உறுப்பு நாடுகள் ஒப்புதல் தெரிவித்தன. பின்னர் இது தொடர்பாக மாநாட்டு முடிவில் அறிக்கை வெளியிடப்பட்டது.

அதில், “இராணுவ தேவைகள் மற்றும் பாதுகாப்பு மற்றும் அது சார்ந்த செலவினங்களுக்காக 2035ஆம் ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 சதவீதத்தை ஆண்டு தோறும் செலவிடுவதற்கு உறுப்பு நாடுகள் உறுதி பூண்டுள்ளன” என குறிப்பிடப்பட்டு இருந்தது.

இந்த உறுதிப்பாட்டை 2029ஆம் ஆண்டு மறு ஆய்வு செய்வதும், ரஷ்யாவால் நேட்டோ நாடுகளுக்கு ஏற்படும் பாதுகாப்பு அச்சுறுத்தலை மறு மதிப்பீடு செய்வதும் இந்த பிரகடனத்தில் அடங்கும். இதைத்தவிர நேட்டோ நாடுகள் தங்கள் வழக்கமான பாதுகாப்பு உறுதிப்பாடான ‘ஒருவர் மீதான தாக்குதல் அனைவருக்கும் எதிரான தாக்குதலாக’ கருதப்படும் என்பதையும் சுட்டிக்காட்டின.

முன்னதாக இந்த இலக்கை தங்களால் எட்ட முடியாது என ஸ்பெயின் கூறியிருந்தது. இதைப்போல தங்களுக்கு சலுகை கேட்டு சில நாடுகள் குரல் எழுப்பி இருந்தன. பல உறுப்பு நாடுகள் பொருளாதார மந்த நிலையை சந்தித்து வருகின்றன. மேலும் ட்ரம்பின் பரஸ்பர வரி உயர்வு நடவடிக்கையும் அவற்றை வெகுவாக பாதித்து வருகின்றன. இதனால் அவை தயக்கம் காட்டி வருகின்றன.

அதேநேரம், மாநாட்டுக்கு செல்லும் வழியில் செய்தியாளர்களை சந்தித்த ட்ரம்ப், நேட்டோ நாடுகள் இராணுவத்துக்கான செலவினத்தை அதிகரிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 சதவீதத்தை இதற்காக செலவிடுவது சிறப்பாக இருக்கும் எனக்கூறிய அவர், இது மேலும் அதிக வலிமையை வழங்கும் என்றும் கூறினார்.

நேட்டோ மாநாட்டில் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியும் கலந்துகொண்டார். ஆனால் பிரதான அரங்கில் அவரால் செல்ல முடியவில்லை. வெளியில் இருந்தே அவரால் மாநாட்டு நிகழ்வுகளைப் பார்க்க முடிந்தது. இதனால் அவர் ஏமாற்றத்துடன் காணப்பட்டார்.

### இலங்கைக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

# 247 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த பங்களாதேஷ்



இலங்கைக்கெதிரான இரண்டாவது டெஸ்டின் தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 247 ஓட்டங்களை பங்களாதேஷ் பெற்றுள்ளது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில் கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் புதன்கிழமை(25) அன்று ஆரம்பமான இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ், அசித பெர்ணாண்டோ (3), அறிமுக வீரர் சொனால் டினுஷ (3), விஷ்வ பெர்ணாண்டோ 2, அணித்தலைவர் தனஞ்சய டி சில்வா, தரிந்து ரத்னாயக்கவிடமே விக்கெட்டுகளைப் பறிகொடுத்திருந்தது. துடுப்பாட்டத்தில் ஷட்மன் இஸ்லாம் 46, முஷ்பிக்கூர் ரஹீம் 35, லிட்டன் தாஸ் 34, தஜியுல் இஸ்லாம் 33, மெஹிடி ஹஸன் மிராஸ் 31, நயீம் ஹஸன் 25 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் இலங்கை, இரண்டாம் நாளின் தேநீர் இடைவேளை வரையில் ஒரு விக்கெட் இழப்புக்கு 190 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் பதும் நிஸங்க 93 ஓட்டங்களுடனும், தினேஷ் சந்திமால் 54 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமலுள்ளனர். முன்னதாக லஹிரு உதார 40 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்திருந்தார். வீழ்த்தப்பட்ட விக்கெட்டை தஜியுல் இஸ்லாம் வீழ்த்தியிருந்தார்.

### முத்தரப்புத் தொடருக்கான

# தென்னாபிரிக்க குழாமில் மார்க்ரம் இல்லை

சிம்பாப்வே, நியூசிலாந்து பங்கேற்கும் இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடருக்கான தென்னாபிரிக்க குழாமில் அணித்தலைவர் ஏய்டன் மார்க்ரம், றயான் றிக்கெல்டன், ட்ரிஸ்டன் ஸ்டப்ஸ், டேவிட் மில்லர், மார்கோ ஜன்சன், ககிஸோ றபாடா, கேஷவ் மஹராஜ், தப்ரையாஸ் ஷம்சி ஆகியோர் இடம்பெறவில்லை.

காயம் காரணமாக அன்றிச் நொர்கியா குழாமில் இடம்பெறாத நிலையில் ஜெரால்ட் கொயட்ஸி, நன்ட்ரே பேர்கர் ஆகியோர் குழாமுக்குத் திரும்பியுள்ளதுடன் றஸி வான் டர் டுஸன் அணிக்குத் தலைமை தாங்கவுள்ளார். குழாம்: றஸி வான் டர் டுஸன் (அணித்தலைவர்), கோர்பின் பொஷ், டெவால்ட் பிறெவிஸ், நன்ட்ரே பேர்கர், ஜெரால்ட் கொயட்ஸி, றீஸா ஹெட்ன்றிக்ஸ், ருபின் ஹெர்மன், ஜோர்ஜ் லின்டி, கவெனா மபஹா, செனுரன் முத்துசாமி, லுங்கி என்கிடி, நக்பா பீற்றர், லுஹான்-றீ பிறிட்டோறியஸ், அன்டிலெ சிமெலனே.



### சகலதுறை வீரர்களுக்கான தரவரிசையில்

# ஐந்தாம் இடத்திற்கு முன்னேறிய ஸ்டோக்ஸ்



சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையில் ஐந்தாமிடத்துக்கு இங்கிலாந்தின் பென் ஸ்டோக்ஸ் முன்னேறியுள்ளார்.

இந்தியாவுக்கெதிரான முதலாவது டெஸ்டில் 53 ஓட்டங்களைப் பெற்றதோடு, ஐந்து விக்கெட்டுகளைக் கைப்பற்றிய நிலையிலேயே எட்டாமிடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி ஐந்தாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் ஐந்து வீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

இரவீந்திர ஜடேஜா, 2. மெஹிடி ஹஸன் மிராஸ், 3. மார்கோ ஜன்சன், 4. பற் கமின்ஸ், 5. பென் ஸ்டோக்ஸ்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஜஸ்பிரிட் பும்ரா, 2. ககிஸோ றபாடா, 3. பற் கமின்ஸ், 4. நொமன் அலி, 5. ஜொஷ் ஹேசில்வூட், 6. நேதன் லையன், 7. மார்கோ ஜன்சன், 8. மற் ஹென்றி, 9. மிற்செல் ஸ்டார்க், 10. ஜேடன் சியல்ஸ்.

இதேவேளை மேற்குறித்த போட்டியில் 252 ஓட்டங்களைப் பெற்ற இந்தியாவின் றிஷப் பண்ட், துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசையில் எட்டாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி ஏழாமிடத்தையடைந்துள்ளார்.

இதுதவிர இப்போட்டியில் 211 ஓட்டங்களைப் பெற்ற இங்கிலாந்தின் பென் டக்கெட், 13ஆம் இடத்திலிருந்து ஐந்து இடங்கள் முன்னேறி எட்டாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஜோ றூட், 2. ஹரி ப்றூக், 3. கேன் வில்லியம்சன், 4. யஷஸ்வி ஜைஸ்வால், 5. ஸ்டீவ் ஸ்மித், 6. தெம்பா பவுமா, 7. றிஷப் பண்ட், 8. பென் டக்கெட், 9. கமிந்து மென்டிஸ், 10. சௌட் ஷகீல்.

### கழக உலகக் கிண்ணத்தையடுத்து

# மிலனுக்காக கைச்சாத்திட இணங்கிய மோட்ரிச்



இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான ஏ.சி. மிலனுக்காக கைச்சாத்திட வாய் வழி ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட்டின் மத்தியகளவீரரான லூகா மோட்ரிச் இணங்கியுள்ளதாக மிலனின் விளையாட்டுப் பணிப்பாளர் இக்லி தாரே தெரிவித்துள்ளார்.

மிலனுக்கும் 39 வயதான மோட்ரிச்சுக்குமிடையிலான தனிப்பட்ட நிபந்தைனைகள் இணங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் கழக உலகக் கிண்ணத் தொடர் முடிவடைந்த பின்னர் மேலதிக ஓராண்டு நீடிக்கக்கூடிய பருவகாலத்துக்கு 3.5 மில்லியன் யூரோக்களைக் கோன்ட ஓராண்டு ஒப்பந்தத்தில் மோட்ரிச் கைச்சாத்திடுவாரெனக் கூறப்படுகிறது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 27, ஜூன் 2025, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.